திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 7 ஜூலை 2004

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஜூலை—

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 7
ஜுலை 2004

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035




மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

செயலர், ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


*இதழ் மணம்* 229

*அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள் (3)* 231
பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்

*பெரிய புராணக் காப்பிய ஒருமை* 236
பேராசிரியர் முனைவர் சுப. அண்ணாமலை

*புலால் மறுத்தலில் அறவியல்*
*செறிந்த அறிவியல் கருத்துகள்* 243
பேராசிரியர் முனைவர் மெ.மெய்யப்பன்

*வளர்ந்து வரும் நாடுகளில் பெண்களின்*
*பொது வெளிப்பாடுகள்* 247
முனைவர் பேரா.கி.இளங்கோவன்

*தமிழும் மலையாளமும்* 255
பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை

# இதழ் மணம்

பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராசன் அவர்கள் "அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள்" மூன்றாம் பகுதி வெளிவருகிறது. பேராசிரியர் திருவாய்மொழிப் பாசுரங்களின் உள்ளீட்டை அரிதின் முயன்று பக்தி அனுபவத்துடன் படிப்பவர்க்கும் திருவருட்பயன் கிடைக்கும் வண்ணம் முத்தமிழ் இன்பத்தை வழங்கியுள்ளார். நம்பிள்ளையின் உரைமாண்பைப் பயில்வோர் உணரும் வகையில் வெளிக்கொணர்வது அரிய முயற்சியாகும். திருவாய்மொழிக்கும் நம்பிள்ளைக்கும் இடைப்பட்ட காலத்தில் மறைந்த செய்திகளை நம்பிள்ளை தம் பாரம்பரிய கல்வி அறிவுநுட்பத்தால் விளக்கியுள்ளார். காலம் இடையிட்டவற்றைச் சான்றோர் தம் கல்வித்தகுதியினாலும் பக்தி அனுபவத்தினாலும் வாசகர்களுக்கு காட்டுவது இன்றியமையாததாகும். பல ஆயிரம் ஆண்டுப் பழமையான தமிழ் வழக்காறுகள் எழுத்துக்களில் இலைமறை காய்களாக மறைந்துள்ளன. அவற்றைப் பேராசிரியர் தம்பழுத்தபக்தி அனுபவத்தினாலும் கல்விப் பயிற்சியினாலும் வெளிக் கொணர்ந்துள்ளார். போற்றிக்கற்று இன்புறத்தத்தக்கதாகும்.

"பெரியபுராணக் காப்பிய ஒருமை" என்னும் தலைப்பில் பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் கட்டுரை வெளிவருகிறது. பன்முகப்பட்ட தமிழ்நாடு அரசியல் பூசலும் போட்டியும் கலாமும் விளைத்து அமைதியின்றிப் போர்க்களமாக விளங்கிய நாட்களிலும் இறையருட் செல்வர்கள் பக்திச் சிறப்பினால் அடியார்க்கு அடியன் என்னும் கோட்பாட்டினால் சாதி சமுதாய இன வேறுபாடுகளைக் கடந்து வாழ்ந்த நுட்பத்தைச் சேக்கிழார் பெரியபுராணமாகத் தந்துள்ளதை ஆசிரியர் கட்டுரையில் வடித்திருப்பது புதிய பார்வையாகும். கட்டுரை ஆற்றொழுக்காக அமைந்து ஆரவாரமும் அதிகாரமும் நிறைந்த அரசியல் தலைமை வேற்றுமைக்கு வித்திடுவதையும் அடியவர்

திருக்கூட்டம் ஒருமை அன்பு நெறியில் இன்ப உலகைப் படைப்பதையும் கற்போர் உளங்கொள்ளும் வகையில் வெளிக்கொணர்ந்துள்ளது.

பேராசிரியர் மெ.மெய்யப்பன் அவர்கள் மெய்ப்பொருளில் அப்பர் என்றே போற்றலாம். இக்கட்டுரையில் உணவின் வன்மை மென்மைகள் உடலைமட்டுமல்ல; உள்ளத்தையும் உயிரையும் சார்ந்து நன்மை தீமைகளை ஏற்படுத்தும் என்னும் கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

முனைவர் கி.இளங்கோவன் அவர்கள் "வளர்ந்துவரும் நாடுகளில் பெண்களின் பொது வெளிப்பாடுகள்" என்னும் கட்டுரை பரவலாக ஆசிரியர் மாணவர்கள் அரங்கில் திறனாய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். பெண்களின் வாழ்க்கைப் போராட்டம், சிக்கல், அவலங்கள் கட்டுரையில் உலகளாவிய அளவில் சிந்திக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களுடைய *தமிழும் மலையாளமும்* என்னும் கட்டுரை ஐம்பது ஆண்டுகளுக்குமுன்பு செந்தமிழில் வெளிவந்துள்ளது. இன்றும் கருத்துக்களுக்காகவும் அவருடைய நடைக்காகவும் தமிழ் மாணவர் உலகம் பயன்பெற மீண்டும் வெளியிடுகிறோம்.

# அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள் (3)

*பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்*

## மெய்ப்பாடுகள்

சங்கத்து அரங்கேறிய அகப்பாடல்களுக்குத் திணை, துறை வகுத்து அவற்றில் நிகழ்கின்ற மெய்ப்பாடுகளையும் உணர்த்தினர் தொகுத்தளித்த சான்றோர்கள். அதுபோன்றே திருவாய் மொழிப் பதிகங்களில் ஓடும் மெய்ப்பாடுகளையும் பாசுரங்களின் ஓசை கொண்டு அறிந்து அவற்றைச் சுட்டிக்காட்டுகின்றனர் உரையாசிரியர்கள். திருவாய்மொழியில் *அங்குமிங்கும் (8-3) என்ற பதிகத்தில் இறைவனுடைய மென்மையறிந்து பரியக்கடவார் ஒருவருமில்லை; நானும் உதவப்பெற்றிலேன்; எம்பெருமான் தனிமைப்பட்டு உளன் என்று ஆழ்வார் அச்சங்கொண்டார்.

*அங்குமிங்கும் வானவர்தானவர் யாவரும்
எங்கும் இனையையென்று உன்னை அறியகிலாது அலற்றி
அங்கம் சேரும் பூமகள் மண்மகள் ஆய்மகள்
சங்கு சக்கரக்கையவன் என்பர் சரணமே (8-3-1)

(அந்த உலகங்களிலும் இந்த உலகத்திலும் மற்றுமுள்ள எல்லா உலகங்களிலும் தங்கியுள்ள தேவர்களும் தானவர்களும் மானிடர்களும் உன்னுடைய மென்மையை அறிந்து அதற்கு வாழ்த்துப் பாடாது தங்களுடைய நன்மைகளையே வேண்டித் துதிபாடித் திருமேனியில் பூமகளும் மண்மகளும் ஆயர் மடமகளும் சேர்ந்திருக்கப் பெற்று சங்கு சக்கரங்களை ஏந்திய கையனே! உன்னையே விரும்பினவற்றைப் பெறுதற்குரிய சாதனம் என்று அடைகிறோம் என்பர்.)

இவர்கள் யாவரும் இறைவனைக் கருவியளவாகவே கொண்டனர்; அவனுக்குப் பல்லாண்டு பாடும் பான்மை பெற்றிலர். அவனுக்கு ஆட்பட்டு அடிமை செய்திலர்; திருவாழி திருச்சங்குகளையாகிலும் சுமந்துகொண்டனரா? இன்றேல் வாளும் வில்லும் கொண்டு இளைய பெருமாளைப் போல் பின்தொடத முற்பட்டனரா? இல்லையே!

ஆளுமாளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்
வாளும் வில்லும் கொண்டு பின்செல்வார் மற்றில்லை
(8-3-3)

என்று ஆழ்வார் எம்பெருமாள் தனிமைக்கு அஞ்சுகிறார்.

மேலும்,

வருவார் செல்வார் வண்பரிசாரத்திருந்த என்
திருவாழ் மார்வற்கு என்திறம் சொல்லார் செய்வது என்?
உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு
ஒருபாடு உழல்வான் ஓர் அடியானும் உளன் என்றே
(8-3-7)

(திருவண்பரிசாரத்திலிருந்து இங்கு திருக்குருகூர்க்கு வருகின்றவர்களும் இங்கிருந்து அங்கு செலல்கின்றவர்களுக்குமான மக்கள் அங்கு திருவண்பரிசாரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என் திருவாழ் மார்பற்கு சங்கு சக்கரங்களைச் சுமந்துகொண்டு இங்கு உம்மோடு ஒருபால் இடைவிடாதே பற்றித் திரிவதற்காகவே ஓர் அடியவனும் உளன் என்று சொல்லமாட்டார்கள்; இனிச் செய்வது என்?) என்று ஆழ்வார் அச்சம் கொண்டார்.

இதனை மணவாள மாமுனிகள்,

* அங்கு அமரர்பேண அவர் நடுவே வாழ்திருமாற்கு
இங்கோர் பரிவரிலை என்று அஞ்ச
(திருவாய்மொழி நூற்றந்தாதி 73)

என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு அச்சங்கொண்ட ஆழ்வாரின் அவ்வச்சம் நீங்கியதை அடுத்த பதிகத்தின் ஓசை தெளிவாகக் காட்டுவதை உரையாசிரியர் நம்பிள்ளை குறிப்பிடுகிறார்.

"அந்த பயம் நீங்கிற்று என்னுமிடம் இயல் தழைப்பிலே தெளிந்திருக்கிறபடி கண்டதே" என்பது வியாக்கியான வாக்கியம்.

இயல் தழைப்பாவது, பாசுரத்தின் ஓசை வேறுபாடாகும்.

இயல் தழைத்துச் செல்லும் அப்பதிகத்தின் முதற்பாசுரம் வருமாறு:

வார்கடாவருவி யானைமாமலையின்
மருப்பிணைக் குவடிறுத்துருட்டி
ஊர் கொள்திண்பாகனுயிர் செகுத்து
அரங்கின் மல்லரைக் கொன்றுசூழ் பரண்மேல்
போர்கடாவரசர் புறக்கிட மாடமீ மிசைக் கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாறெங்கள் செல் சார்வே (8-4-1)

ஒழுகுகின்ற மதமாகிய அருவிகளையுடைய யானையாகிய பெரிய மலையின் தந்தங்களாகிற இரண்டு சிகரங்களை முறித்து அதனைக் கீழே தள்ளி, அந்த யானையைச் செலுத்தி வந்த வலிய பாகனுடைய உயிரையும் கவர்ந்து, சபையிலேயிருந்த மல்லர்களையும் கொன்று, சுற்றிலுமிருந்த மஞ்சத்தின் மேலேயிருந்து போரைச் செலுத்துகின்ற அரசர்கள் புறமுதுகிட்டு ஓட, உயர்ந்த மாடத்தின் மேலேயிருந்த கஞ்சனைக்கொன்ற சீர் கொள் சிற்றாயனான கண்ணபிரான் எழுந்தருளியிருக்கின்ற திருச்செங்குன்றூரிலுள்ள திருச்சிற்றாறு நாங்கள் சென்று கிட்டுவதற்குரிய புகலிடமாகும்.

“அங்குமிங்கும்” என்று ஐஞ்சீரடிகளில் தேங்கியிருந்த அச்சம் எழுசீர்கழிநெடில் அடிகளில் அறவே நீங்கித் தழைத்துள்ளமை அறியப்படும். அச்சமான மெய்ப்பாடு நீங்கி மகிழ்ச்சியான மெய்ப்பாடு தழைத்துத்தளிர் விட்டது.

இடைவெளிகள்

பாசுரங்களுக்கு இடைவெளியில் ஆழ்வார் புதுச்சொற்களைத் தொடுப்பதற்குமுன் கால்வாங்க மாட்டாதே நைந்து தொங்கியிருந்த படிகளையெல்லாம் இசையிலேதான் காண முடியும்.

*கண்கள் சிவந்து பெரியவாய் வாயும் சிவந்து
கனிந்துள்ளே (8-9-1)

என்று ஆழ்வார் பாசுரமாகிறபோது, 'கண்கள் சிவந்து' என்று அனுசந்தித்து எம்பெருமான் திருக்கண்களின் செவ்வியை நீடு நினைந்து உள்குழைந்து மேல் பாசுரம் தொடருவதற்கு நெடும்போது ஆயிற்று என்பது அப்பதிகத்தின் பண்ணிசை கொண்டுதான் உணரமுடியும் என்பர் உரையாசிரியர் நம் பிள்ளை.

"கண்ணிலே துவக்குண்டு கால்வாங்கமாட்டாதே இருக்கிற இருப்பு இசை கொண்டு காணுமித்தனை" என்று இசையறிவின் தேவையை வலியுறுத்துகிறார்.

*முடியானே (3-8) என்ற திருவாய்மொழிப் பதிகத்தில் ஆழ்வாரின் விடாய் உச்ச நிலையை எய்தியது. தம்முடைய கரணங்களோடு தாமும் பெருவிடாய்ப்பட்டுப் பேசியுள்ளார்.

* முடியானே! மூவுலகும் தொழுதேத்தும் சீர்
அடியானே! ஆழ்கடலைக் கடைந்தாய்! புள்ளூர்
கொடியானே! கொண்டல் வண்ணா! அண்டத்தும்பரில்
நெடியானே! என்று கிடக்கும் என் நெஞ்சமே (3-8-1)

ஈண்டு ஆறு முறை இறைவனை விளித்துப்பாடுகிறார்.

"இவர்க்கு ஓடுகிற விடாயின் பெருமை இசையின் ஓசையிலே காணுமித்தனை; புகும் கிரமங்கள் எல்லாம் இல்லை. இதில் முதலிலே உயர்ந்த தானமாயிருக்கும்" என்று நம்பிள்ளை குறிப்பிடுகிறார். அதாவது உச்சஸ்வரத்தில் எடுத்த எடுப்பிலேயே பாசுரம் தொடங்குகிறது என்பது அவர்தம் கருத்து.

கூத்துக்கலை:

இனி, திருவாய்மொழிப் பாசுரங்கள் இயலும் இசையும் புணர்ப்புண்டு அமைந்ததுபோல, கூத்தியலும் அவற்றோடு பொருந்திக் கிடப்பதை நம்பிள்ளை பலகால் சுட்டிக்காட்டிச் செல்கிறார்.

திருவாய்மொழியில் ஓடும் மெய்ப்பாடுகளான பாவங்கள் இரு திறத்தன என்று உரையாசிரியர்கள் உணர்த்துகின்றனர்.

முதற்கண், ஆழ்வாரின் மானச - அனுபவத்தில் எம் பெருமானுடைய திருவவதாரக் காட்சிகள் எழும்போது, அவை யாவும் முத்தமிழ்க்குட்பட்ட கூத்துக் கலையிற் கண்ட இலக்கண நெறிமுறைகளைப் பின்பற்றியே அமைந்தன என்பது நம்பிள்ளை காட்டும் பேருண்மையாகும்.

"ஆடற்கலையில் வல்லான் ஒருவன் ஆடினாப்போலே யாயிற்று எம்பெருமான் ஆழ்வார்க்குக் காட்டியருளிய

*அவதார சேஷ்டிதங்கள் (சிறப்புச் செயல்கள்)"* என்பது ஈட்டுரை.

ஆழ்வார் எம்பெருமானை 'கூத்தா' என்றழைக்கும் போதெல்லாம் இவ்வுண்மையை நம்பிள்ளை உணர்த்தத் தவறுவதில்லை.

எம்பெருமான் கண்ணபிரானாய்க் குன்றமெடுத்த காட்சி ஆழ்வாருடைய மனத்திரையில் உருவாகின்றபோது அக்கண்ணபிரான் திரிபங்கி லட்சணத்துடன் நின்றான் என்றும் அஃதோர் கூத்து என்றும் வல்லார் ஆடினாப்போல் மிகவும் ஆகர்ஷகமாய் (மனம்கவர்வதாய்) இருந்தது என்றும் அவர் குறிப்பிடுவர்,

*உம்மைத் தொகையா வேற்றுமைத்தொகையா?*

நம்மாழ்வார் * ஆழியெழ (7-4) என்னும் பதிகத்தில் இறைவனது வெற்றிச் செயல்களையெல்லாம் ஒன்று தப்பாமல் கண்டு கண்டவாறே பாசுரமிடுகிறார். அதில் முதற்கண், இறைவன் திரிவிக்கிரமனாய் வளர்ந்து மூவுலகங்களையும் அளந்தவற்றை வருணிக்கிறார்.

ஆழியெழச் சங்கும் வில்லுமெழத் திசை
வாழியெழத் தண்டும் வாளுமெழ அண்டம்
மோழையெழ முடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே (7-4-1)

"முடிபாதம் எழ" என்ற தொடருக்குப்பிறர் முடியும் பாதமும் எழ என்று உம்மைத்தொகையாக விரித்துப் பொருள் உரைத்தனர். ஆனால் நம்பிள்ளையோ 'முடிக்குமேல் பாதம் எழ' என்று நான்காம் வேற்றுமையுருபு கொடுத்து விரித்து, திருமுடிக்குமேல் திருவடிகள் உயர்ந்தன என்று பொருள் பணித்தார் இதற்குக் காரணம் கூறும்போது, "நிருத்தலக்ஷணம்" கொண்டு அப்படி நிர்வகித்ததாகக் குறிப்பிடுவர். திருமால் உலகளந்த செய்தியை நாட்டிய சாஸ்திரத்தில் அவ்வாறு குறித்துள்ளதாகக் காட்டுகிறார். உலகளந்தநிலையைக் காட்டி ஆடும் ஒருவன் மேடைமீது அவ்வாறு ஒரு காலைத் தலைக்கு மேல் தோன்றுமாறு எழுப்புதல் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடரும்

# பெரிய புராணக் காப்பிய ஒருமை

*முனைவர் சுப. அண்ணாமலை*

## 1. பன்மைத் தலைமை

சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் பெரிய புராணக் காப்பியத்தின் பாபீடுடைத் தலைவர் நம்பியாரூரர் என்ற சுந்தர மூர்த்தி நாயனார் எனக் காரணம் காட்டி நிறுவினார். அக் காப்பிய முழுதும் அந்நாயனார் வரலாறு கூறப்பெறாமையானும், அதன் பாயிரத்துள்,

**நாயன்மார் தூய சொன்மலர்ப்**
**பொதிந லன்நுகர்தரு புனிதர் பேரவை**
**விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே**

எனச் சேக்கிழார் "**அடியார் திருக்கூட்டம்**" என்ற அமைப்பினை வாழ்த்துதலானும், இங்கிதன் நாமம் கூறின் திருத்தொண்டர் புராணம் என்பாம் என நூற்பெயர் கிளத்தலானும் முதலியார் கூற்று மெலிவுறுகின்றது.

நம்பியாரூரர் தலைவராயின் நாடு, நகரச் சிறப்புகளாக முறையே நடுநாடு, நாவலூர் ஆகியவற்றின் சிறப்பே, கூறப்பெற வேண்டும். அங்ஙனமன்றிச் சோணாடும் திருவாரூரும் புனையப் பெற்றுள்ளன. சேக்கிழார், **தொண்டர் கூட்டம்** நிறைந்து வாழ்தலின் சோணாட்டுச் சிறப்புரைப்பேன் என்று காரணம் காட்டுகின்றார்.

**உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்**
**அலகில்சீர் நம்பி ஆரூரர் பாடிய**
**நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை**
**குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்**

-திருமலை பா.எண் 40

திருத்தொண்டர் கூட்டத்தை நம்பியாரூரர் கண்டது, திருவாரூர்ப் பூங்கோயிற்கண், தேவாசிரிய மண்டபத்தில் ஆதலின், திருவாரூர் நகரம் சிறப்பிக்கப்பெற்றது. அவர்கள் அங்கு ஒருங்கே கூடியமையாலும், மற்றொரு சிறப்புக் காரணம் பற்றியும் "**அடியார் திருக்கூட்டம்**" என்னும் வழக்கும், மக்கள் அந்தப்

பேரவையை வழிபடுதலும் தோன்றின. இச் சிறப்புக் காரணம் பின்னர் விளக்கப்படும்.

நம்பியாரூரர் அவர்கள் பெருமை உணர்ந்து வணங்கிய பின்பு இறைவனால் 62 அடியார்களின் ஊர், பெயர், தொண்டு, சிறப்பு ஆகியன அறிவிக்கப்பெற்றும், 9 தொகையடியார்களை இனங்காட்டப்பெற்றும், மொத்தம் 71 அடியார்களைத் தனித்தனி ஒவ்வொருவருக்கும், "**யான் அடியேன்**" என்று வணக்கம் கூறித் **திருத்தொண்டத் தொகை** என்னும் பதிகம் பாடினார்.

அதனை முதனூலாகக் கொண்டு, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் வழிநூல் செய்தார். இது 100 பாடல்கள் கொண்டு திருத்தொண்டர் வரலாற்றை மேலும், சற்று விரிவாகக் கூறுவது, இவ்விரு நூல்களையும் சேக்கிழார் தமது ஆய்வினால் விரித்துக் காப்பியஞ் செய்தாராதலின், இந்நூல்களிற் போலப் பெரிய புராணத்தும் தொண்டர்களே பாட்டுடைத் தலைவராவர்.

தன்னிகரற்ற ஒருவரைத் தலைவராகக் கொள்ளுதல், அல்லது ஒருவரைத் தலைவராகக் கொண்டு, தன்னிகரற்றவராகச் சித்தரித்தல் என்ற முன்னைக்காப்பிய மரபுக்கு மாறாகச் சேக்கிழார் பலரைப் போற்றி, அவர்கள் பண்பு நலன் புலப்படக் காப்பியம் செய்தார். அவரது சிந்தனை மாற்றத்திற்கு, அவர் கால அரசியல் சமுதாயச் சூழல் காரணமாகும். அரசியலின் போக்கிற்கு எதிர்ச் சிந்தனையாக மக்களிடம் எழுந்த கருத்து மாற்றமே சேக்கிழாரிடம் எதிரொலித்தது. அக்கருத்து மாற்றத்தை உரக்கப் பேசும் மக்கள் கவிஞராக அவர் செயற்பட்டார்.

இங்கு நாம் குறிக்க வேண்டுவது, முன்னைக் காப்பியங்களில் அரசன் என்னும் தலைமை முந்நுறுத்து நின்றது. இதற்கு மாறாகச் சேக்கிழாரின் படைப்பில் மக்களும் சமுதாயமும் முந்நுறுத்து நிற்கின்றனர் என்பதாகும். அவரால் போற்றப்படும் அடியார்கள். வேளாளர், வணிகர், அந்தணர், ஆதிசைவர், ஆயர், சலவைத் தொழிலாளர், குயவர், சாலியர், சான்றார், செக்கார், நுளையர், பாணர், புலையர், மாத்திரபிராமணர், வேடர் எனப் பல மரபினர். இவர்கள் தமிழகம் முழுதும் விரவியிருந்தனர். இவர்கள்

வரலாற்றை மரபுப் பின்னணியோடு பாடும் சேக்கிழார் தமிழகத்தின் சமுதாய வரலாற்றையே நம் கண் முன் நிறுத்துகிறார்.

கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் சமயக் குரவர்களும் திருத்தொண்டர்களும் பரப்பிய சமய மறுமலர்ச்சியாகிய அன்புநெறியும் தொண்டு வாழ்வும் மக்களிடம் அக அமைதியையும், சமுதாய சுமுக வாழ்வையும், அவற்றின் விளைவான இன்பத்தையும் உண்டாக்கி, பேரரசின் அரசியலைவிட, அதில் நிகழ்ந்த போர்களைவிட, வெற்றி எக்களிப்புக்களை விட, அரசாங்க அதிகாரி ஆர்ப்பாட்டங்களை விட ஆழமான முத்திரை பதித்தமையைச் சேக்கிழார் கண்டார். அரசியல் மாற்ற முயலாத - மாற்ற முடியாத மக்கள் உயர்வு-தாழ்வுச் சிக்கலை சமயத்துறையில் தொண்டர்களின் அன்புநெறி எளிதாக மாற்றிவிடுவதைக் கண்டார்.

இதற்குத் திருநாவுக்கரசர், தமது தேவாரப்பாடல் ஒன்றில், ஒருவர் புலையராயினும் சிவனடியாரெனின், வணங்கத்தக்கவர். எனக்கூறியதும் நந்தனார் தாழ்குலப் பிறப்பால் தமக்கே தோன்றிய தயக்கம் காரணமாகத் தில்லைக் கோயிலின் உள்ளே செல்லாமல், வெளியே நின்று வணங்கி, நெருப்பில் பாய்ந்து தமது அன்பை வெளிப்படுத்திய, போது தில்லை வாழந்தணர் அவரை, ஐயரே என்று அழைத்து, கோயிலினுள் கூட்டிச் சென்றமையும் திருநீலநக்கர் எத்தயக்கமுமின்றித் திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம் மனையினுள் ஓம குண்டத்தின் அருகில் தங்கச் செய்தமையும் மற்றும் பல அடியார்களின் வரலாறும் சான்றாகும். சமயத்துறையில் தோன்றிய இச்சாதி வேற்றுமைபாராமை சமுதாயத்தில் வேரூன்றவில்லை.

அரசியலில் நெடுங்காலமாகத் தலைவன், அரசன், பேரரசன் என்ற தலைமைக் கருத்து வேரூன்றி இருந்தமையால் ஊர்த்தலைவன், கோட்டத் தலைவன், சாதித்தலைவன் என்று பேசும் வழக்கம் ஒருபுறம் இருக்க, அடியார், அடியேன் என்று கூறும் புதிய பண்பாடு மலர்வதையும் சேக்கிழார் கண்டார். இப் பண்பாட்டினால், சமுதாய வாழ்வின் தன்மையும் மாறி வந்தது.

தலைமைக் கருத்து உள்ள இடத்தில் போட்டியும், பொறாமையும், பூசலும் போரும் தவிர்க்க இயலாமற்போக, அடியார் பண்பாடு நிலவும் இடத்தில் அன்பும் அமைதியும் இன்பமும் விளைவதைச் சேக்கிழார் கண்டார்.

அடியார்களின் அன்பு-தொண்டு நெறி தன்னடக்கத்தையும் தன் மறுப்பையும் உருவாக்கித் தன்னுடனே வைத்து வளர்ப்பதாகும். அடியார் அனைவரும் துறவியரல்லர். துறவில் வரும் தன்னடக்கமும், தன் மறுப்பும் கட்டுப்பாடு காரணமாக உருவாக்கிக் கொள்பவை. ஆனால் இல்லறம் சார்ந்த அடியார்களின் இப்பண்புகள், அன்பு காரணமாக இயல்பாகத் தோன்றியவை.

திருத்தொண்டர்களின் வாழ்க்கையில் வேறெங்கும் காணற்கரிய காட்சி, அவர்கள் சந்தித்தபோது, ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு வணங்கியமையாகும். இதனைச் சேக்கிழார் சோழ நாட்டில் சாலிநெற்பயிர் முதிர்ந்து விளைவதற்கு உவமையாக்கி,

**பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாமன்பர்**
**தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல்**
**மொய்த்த நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை**
**வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்**

- (திருநாட்டு- 22)

என்று பாடுகின்றார். இறையன்பினால் அடியார்கள் பண்பாட்டில் முதிர்ந்து நின்றனர். அப் பண்பாட்டு வித்தகர் தம் வாழ்வால் வழிவழி வரும் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாவர். இங்ஙனமாதலைத் திருவள்ளுவர், உளதாகும் சாக்காடு என்றார். அவர்களது பூதவுடல்தான் இறக்கும். புகழுடலோ என்றென்றும் பெருகி மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். ஆகையால் நெல்விதைகள் ஒன்றுக்குப் பன்மடங்காக விளைந்த விளைவிற்கு வித்தகர் தன்மையை உவமையாக்கினார் சேக்கிழார்.

நீண்ட வரிசையில் நிற்கும் பயிர்கள், தாம் ஒருங்கே நாற்று நடவு செய்து வளர்ந்தமையைக் காட்டும். அவை முற்றும்பொழுது கதிர்கள் ஒருங்கே சாயும். அவை அடியார்களைப் போலத்

தலைவணங்கின எனின், அவர்கள் தம்முள் தலைமையோ, குலமோ, தகுதியோ கருதாமல், இயல்பாக எழுந்த, அன்பினால் ஒருவரை ஒருவர் வணங்க முந்தினர் என அறியலாம். இவ்வாறு வணங்கிக் கொள்ளும் செயலில் அவர்கள் இன்ப நிறைவு கண்டனர். இது, இருவர் உள்ளமும் கலத்தலினால் விளைவது. ஆதலினால் அந்த அன்பையே இருவரும் வேண்டினர். வீடுபேறு பெறுவதையும் அத்துணை விரும்பவில்லை.

**கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**

கூடும் அன்பு என்பதற்கு, மிகும் அன்பு என்றலை விட, கூடுதலால் தோன்றும் அன்பு எனவும் உள்ளக்கலப்பிற்குக் காரணமான அன்பு எனவும் பொருள் கொள்ளுதலே ஏற்புடையது.

இப்பணிவுப் பண்பாடு தமிழகச் சமயத்துறையினரின் வாழ்க்கைப் போக்கைத் திசை திருப்பியது. இறையன்பு அடியார்க்குச் செய்யும் அன்பாகவும் பரிணமித்தது. அதுவே விரிவடைந்து, மக்கள் தொண்டாகவும் உருக்கொண்டது. திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது, திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஊர் முழுதும் பறையறைவித்து உணவளித்தமை இதற்குச் சான்று பகரும்.

அவர்களைத் தொடர்ந்து, தமிழகத்தில் திருத்தொண்டர் திருக்கூட்டம் ஆங்காங்குத் தோன்றி அவர்களின் வழியில் சமய, சமுதாய, மொழி, பண்பாட்டு மறுமலர்ச்சியை 5 நூற்றாண்டுகள் தமது தொடர்பணியால் நிலைபெறச் செய்தனர். அவர்கள் யாருடனும் பூசல் விளைக்கவில்லை. வன்முறையை வளர்க்க வில்லை. தமது பணிவுப் பண்பாட்டால், அன்பால் அந்த அரிய சாதனையைச் செய்தனர்.

இதனால் திருத்தொண்டர் கூட்டம் என்பது சிறப்புப் பெற்றது. சிவ வழிபாட்டோடு அடியார் வழிபாடும் தோன்றியது. இத் திருத்தொண்டர் கூட்டங்களுள் ஒன்றே நம்பியாரூரர், தேவாசிரிய மண்டபத்தில் கண்டு வணங்கியது. அவர்களைக் கண்டபோது, அவர்கட்கு எல்லாம் நான் அடியேன் என்று,

தம்மையும் பணிவுப் பண்பாட்டில் இணைத்துக் கொள்கின்றார். சிவபெருமானால் தடுத்தாளப் பெற்று, அவருக்கு அடியாரான நம்பியாரூரர் தாம் அடியார்க்கு அடியாராக வேண்டும் என்று விரும்பினார். இறைவன் அடியார்கள் 71 பேரின் வழித்தொண்டினை அவர் உணர அருள்செய்து, பின்னும் அவர்களது பெருமையை எடுத்துக் கூறினார். அவ்அடியார்களின் வாழ்வால் ஈர்க்கப் பெற்றமையால் எழுந்த நூலே திருத்தொண்டர் தொகை. அதை முதனூலாகக் கொண்டு காப்பியம் செய்த சேக்கிழார் அந்த 71 திருத்தொண்டர் களினுடைய வரலாற்றையும், சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றையும் பாடுபொருளாகக் கொண்டாலும் காப்பிய இலக்கணத்திற்கு ஏற்ப, பன்மைத் தலைமையானது ஒருமைத் தலைமையாகத் தோன்றுமாறு செய்தார். தமக்கு முந்திய கால, சமகாலச் சமுதாயத்தில் சைவ நெறியின் வளர்ச்சியிலும், சமுதாய நல்வாழ்விலும் திருத்தொண்டர் திருக்கூட்டம் பெரும்பணி ஆற்றியமையால், தொண்டர்கள் எனத் தனியாகக் கருதாமல், தொண்டர் கூட்டம் எனத் தொகுதியாகக் கருதுமாறு காப்பியத்தை அமைத்தார்.

காப்பியத்தின் திருநகரச் சிறப்பின் ஒரு பகுதியாகக் கருதத்தகும் திருக்கூட்டச் சிறப்பும், அதில் தேவாசிரிய மண்டபமும் அதில் கூடும் தொண்டர் திருக்கூட்டத்தின் சிறப்பும் இந்நேரத்தில் அமைக்கப் பெற்றவையே. இப்பகுதியின் இறுதியில் “இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான் அந்தமில் புகழ் ஆலால சுந்தரன், சுந்தரத் திருத்தொண்டத் தொகைத் தமிழ் உவந்து பாடிய வண்ணம் உரை செய்வாம்" என்று சேக்கிழார் கூறினாலும், திருத்தொண்டத்தொகையில் பாடப்பெற்ற தொண்டர்கள் ஒரு காலத்தவர் அல்லர். ஓர் ஊரினர் அல்லர். தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களை முன்னிட்டுக் கொண்டு இறைவன் நம்பியாரூரர்க்கு பல்வேறு காலத்தில், பல ஊர்களில் இருந்த தொண்டர்களின் தொண்டின் சிறப்பை உணர்த்தினான். அத் தொண்டர் ஒவ்வொருவரும் ஒரு தொண்டர் திருக்கூட்டம் உருவாவதற்கு நேர்முகம் அல்லது மறைமுகக் காரணமாகியிருக்க வேண்டும். எவ்வாறு இருப்பினும்,

தேவாசிரிய மண்டபம் தொண்டர் திருக்கூட்டத்தின் பிரதிநிதியாகக் கொள்ளப்பட வேண்டும். அங்குக்கூடிய தொண்டர்கள் தனியாளர் அல்லர் தொண்டர் திருக்கூட்டத்தார். இது ஒன்று அன்று; ஆயின் தொகுதியாக அமைந்த ஒன்று. இதனைத் தொகுதி ஒருமை என்பர்.

இந்த மாதவர் கூட்டத்தைச் சேக்கிழார் பாடுதலின், அவரது காப்பியம் தொகுதி ஒருமையாக அமைந்த தலைமையை உடையது. தொண்டர் திருக்கூட்டம் தலைமை ஏற்பதால், திருநாட்டுச் சிறப்பாக,

**தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை**
**குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்**

என்று சேக்கிழார் கூறுகின்றார்.

ஜூன் இதழில் உள்ள பிழைத்திருத்தம்

| பக்கம் எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 195 பா 2 ஆம் அடி | உரையும் | உறையும் |
| பா.நான்காம் அடி | அருநீர் | அருளீர் |
| 215 தலைப்பு | செரிந்த | செறிந்த |
| 219. தலைப்பு | கரும்பு அயிரக் | கரும்பு அயிலக் |

நன்றி: பேராசிரியர் அ.தட்சிணா மூர்த்தி தஞ்சாவூர்

# புலால் மறுத்தலில் அறவியல் செறிந்த அறிவியல் கருத்துகள்

முனைவர் மெ.மெய்யப்பன்

கொல்லாமையும், புலால் உண்ணாமையும் நிலைத்த வளமான சமுதாயத்திற்கு மக்கள் பின்பற்றியொழுக வேண்டிய அறநெறி என்பதை வாழும் மக்களுக்கும், வாழப்புகும் சந்ததியினருக்கும் வலியுறுத்திக் கூறவேண்டும் என்பதற்காகத் திருவள்ளுவர் தம் நூலில் அவைகளுக்காகத் தனித்தனி அதிகாரங்களைப் படைத்தார். சமுதாய நோக்குடன், தனி மனிதர்களின் சமுதாயக் கடமைகளை இவ்வதிகாரங்கள் விவரிப்பினும், அதன் ஆழத்தில் இன்றைக்கு எட்டிப் பிடித்த அறிவியல் சார்ந்த கருத்துக்கள் ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகின்றது.

ஓர் உயிர், பிரிதோர் உயிரைக் கொல்லுதல் என்பது அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் பின் விளைவிக்கும் என்பதால், சம்பந்தப்பட்ட, எல்லோருக்கும் நன்மை தரக்கூடிய ஓரினிய சமுதாயத்தில் கொல்லாமை என்ற அறநெறி என்றென்றைக்கும் பின்பற்றியொழுகப்பட வேண்டிய அவசியமாகும். இதனை வள்ளுவர்.

"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்" (குறள்.321)

என்ற குறளில் தெள்ளத் தெளிவாய் எடுத்துரைக்கின்றார்.

பிறவுயிர்களைக் கொல்லுதல் அறமல்லாத தீய செயலே என்றாலும், உயிர்க் கொலையை இயற்கை ஓரிடத்திலும், கட்டுப்பாடான சமுதாயம் ஓரிடத்திலும் அனுமதிக்கின்றது.

கொடிய வன விலங்குகள், உயிர் வாழத் தேவையான உணவிற்காகப் பிற உயிரினங்களை வேட்டையாடிக் கொல்வதை இயற்கை நியாயப்படுத்தி வைத்திருக்கின்றது. இரையாகும் விலங்கினங்களைப் படைத்த அதே இயற்கைதான், இரையுண்ணும் விலங்கினங்களையும் படைத்திருக்கின்றது. இனிப்பிருக்கும் இடத்தில் எறும்பிருக்கும்; தேன் கிடைக்கும் மலர்த் தோட்டங்களில் தான் தேனீக்கள் இருக்கும்.

அதைப்போல இரை எங்கு கிடைக்கின்றதோ, அவ்விடத்தில் இரையுண்ணும் விலங்கினங்கள் தோன்றிப் பெருகுவது என்பது பரிணாம வளர்ச்சியின் அடிப்படைக்கூறு. இது இயற்கையின் நடைமுறை மட்டுமல்ல, இயற்கையின் கட்டளையும்கூட. இதை மீறிச் செயல்பட விலங்கினங்களால் முடியாது.

வனவிலங்குகள் உயிர்க்கொலை செய்ய இயற்கை தந்த அனுமதிகூட, அவைகளுக்காக மட்டுமல்ல, இணைந்து வாழும் பிற விலங்கினங்களின் நன்மைக்காகவும்தான். உலகில் அனைத்து உயிரினங்களின் வாழ்க்கைச் சூழலின் சமநிலையைப் (Ecological balance) பாதுகாத்து, ஓர் உயிரினத்திற்குப் பிரிதோர் உயிரினத்தால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் கட்டுப்படுத்த, இயற்கை இவ்வழிமுறையை வெற்றிகரமாய்ப் பின்பற்றி வருகின்றது. வன விலங்குகள் கொல்லாமை என்ற அறநெறியைப் பின்பற்றிப் புலால் மறுப்பின் அவைகளுக்கு இரையாகும் விலங்குகளின் இனப்பெருக்கம் வரம்பு மீறி, அதுவே உலகில் பிற உயிரினங்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தொல்லையாகிவிடக்கூடும்.

இரைக்காக விலங்குகள் விலங்குகளைக் கொல்ல அனுமதிக்கும் இயற்கை, அதே காரணத்திற்காக மனிதர்கள் விலங்குகளைக் கொல்ல அனுமதிப்பதில்லை. ஆனால் சமுதாய வாழ்க்கை என்பது மனிதர்களால் உருவாக்கப்பட்டதெனினும், இயற்கையைப் பார்த்துப் பார்த்துக் கற்றுக்கொண்டவைகளைப் பின்னிப் பின்னி நேர்த்தியாக அமைக்கப்பட்டதால் எல்லோருக்கும் ஒருசேர இனிமை பயப்பதாய் இருக்கின்றது. ஓர் உயிரினத்தின் இனப்பெருக்கம் ஓரிடத்தில் வரம்பு மீறிச்சென்று அவற்றின் ஊடுறுவலால் சமுதாய வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுமெனில், அவற்றின் பெருக்கத்தை மட்டுப்படுத்த கொன்றழிக்கலாம் என்று இயற்கை கூறுகின்றது.

மக்கள் "கொல்லாமை" என்ற அறநெறியை மீறிச் செயல்பட வேண்டிய சூழ்நிலைகளைச் சமுதாயக் கட்டுப்பாடும் தெரிவிக்கின்றது. வாழ்வியல் ஒழுக்கங்களில் பெரிய அளவில் சீர்குலைவு ஏற்படுவதற்குக் கொலை போன்ற தீய செயல்களைச் செய்வோர் காரணமாவதால், பின் வரும் சந்ததியினர் எல்லோரும் அதன் பாதிப்பின்றி, இவ்வுலகில் இனிதே வாழ வேண்டும் என்ற

உயரிய நோக்கில், அக்கயவர்கள் கொல்லப்படுவதைச் சமுதாயம் ஏற்றுக்கொள்கின்றது. அவர்கள் கொல்லப் படாவிட்டால் சமுதாயம் அவர்களால் கொல்லப்படும். அந்த விதத்தில் சமுதாயத்திற்கு அறிமுகமானதே தூக்குத்தண்டனை, கழுவேற்றுதல் போன்ற தண்டனைகளாகும். வள்ளுவரின் கொல்லாமைக்கு எதிரான இப்போக்கை ஏற்றுக்கொள் ளாதவர்களும் இச்சமுதாயத்தில் உண்டு. தண்டிப்பதைவிட, மன்னித்துத் திருத்துவதே மாண்புடைமை என்றும் நிலைப்புத்தன்மை மிக்கது என்றும் இவர்கள் மரண தண்டனைக்கு மாற்றுச் சொல்வர்.

அதைப்போல நாட்டை நயவஞ்சகமாய் அபகரிக்க முயலும் பகைவரைப் போரில் கொன்று குவிப்பதும் குற்றமல்ல என்று சமுதாயம், சரித்திரச் சான்றுகளின் அடிப்படையில் கூறினாலும் அது இயற்கைக்கு ஏற்புடையதல்ல. ஏனெனில் இயற்கை மனிதர்களுக்காகப் படைத்தது ஒரே ஒரு நாடுதான். அது நாம் வாழும் இந்த உலகமே. இதை நாம்தான் துண்டுதுண்டாக்கி நாடு என்றழைக்கின்றோம். உலகப் பற்றிலாதவனுக்கு நாட்டுப்பற்று எங்கிருந்து வந்தது? நாட்டின் எல்லைகள் விரிந்தால் உலகமாகிவிடுமே. மனதின் எல்லைகள் விரியாததால் ஏற்படுகின்ற குழப்பங்கள்தான் இவைகளே ஒழிய வேறில்லை.

மேற்சொன்ன வரைமுறைகளுக்கு அப்பாற்பட்ட உயிர்க் கொலைகள் அனைத்தும் ஏற்கப்படாதவைகளாகும். எடுத்துக்காட்டாக சைவ உணவுண்ணும் விலங்கினங்களின் வரிசையில் படைக்கப்பட்ட மனிதன், அசைவ உணவுகளின் மீது விருப்பங்கொண்டு அதற்காக விலங்கினங்களைக் கொன்று தின்பதையும், யாகம், என்றும் படையல் என்றும் உயிர்ப்பலியிடு வதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். மென்னின விலங்குகளின் மீது இரக்கம் கொள்ளாவிட்டால், மனதில் வன்தன்மை வளரப்பெற்று அருளில்லாமையால் இவ்வுலகைக் கடிய இருள் சூழும். அதன் பரிணாம வளர்ச்சி இவ்வினிய உலகு இயற்கையால் தீர்மானிக்கப்பட்ட நாட்களுக்கு வெகுமுன்பாகவே முழுமையாக அழிவுறும் நிலையை ஏற்படுத்தும். இதை அறிவுறுத்தும் முகத்தான் புலால் மறுத்தலில் இரு குறள்களை இணைத்துள்ளார்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" குறள்:251

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" குறள்:259

இன்றைக்கு புலால் உண்ணாமைக்காக உலகில்பல இயக்கங்கள் தோன்றிச் செயலாற்றி வருகின்றன. இவற்றின் அடிப்படை நோக்கம், அசைவ உணவைவிடச் சைவ உணவே மேலானது என்பதை மக்கள் மனதில் நிலை நிறுத்துவதாகும். என்றாலும் இதனுள் உயிர்க்கொலைகளைத் தடுப்பதும் அடங்கியிருக்கின்றது. இவர்கள் தங்களுடைய கருத்துகளுக்கு முழுக்க முழுக்க அறிவியலையே ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள். மனதில் கருத்துக் குழப்பமேற்படுவதைத் தவிர்ப்பதால் மக்களிடையே இது ஒரு பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது என்றால் மிகையில்லை.

திருவள்ளுவரைப்போல அருளின் அடிப்படையில் கூறினாலும், இல்லை இவ்வியக்கத்தினரைப்போல அறிவியலின் அடிப்படையில் கூறினாலும், சமுதாய மக்களுடைய செயல் பாட்டில் வேண்டப்படும் எதிர்பார்ப்பு ஒன்றுதான். பல அறிவியல் கருத்துக்களைப் பட்டியலிட்டுக் காட்டி, அசைவ உணவைக் கைவிட்டு, சைவ உணவை மேற்கொள்ளுமாறு மக்களைத் தூண்டும் முயற்சியில் இந்த சைவ இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் எந்த அடிப்படைக் கருத்தை முன்னிருத்தித் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்கின் றார்களோ, அதைத் திருவள்ளுவர் அன்றைக்கே 'கொல்லாமை' மற்றும் 'புலால் மறுத்தல்' என்ற அதிகாரங்களின் வாயிலாகச் சொல்லியிருக்கின்றார். மக்களின் அறியாமையை இவ்இயக்கத்தினர் சுட்டிக்காட்டினால் வள்ளுவர் அவர்களின் அருளின்மையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

திருவள்ளுவருடைய கருத்துக்கள் அறிவியலோடு ஒத்துப் போகின்றன என்றால் அதற்குக் காரணம் அவருடைய அறிவியல் அறிவு என்பதில்லை. ஆனால் அவருடைய சிந்தனைகள் எல்லாம் அறிவியலுக்கு மூலமான இயற்கையோடு நெருக்கமான தொடர்புடையனவாக இருக்கின்றன. இதைப் பற்றிய நுண்ணாய்வை மேலும் அடுத்த இதழில் பார்ப்போம்.

இன்னும் வளரும்

# வளர்ந்து வரும் நாடுகளில் பெண்களின் பொது வெளிப்பாடுகள்

- *முனைவர் பேரா.கி.இளங்கோவன்*
தமிழ்த்துறைத்தலைவர் (முன்னாள்)
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கிடையே இன்று காணப்படும் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நாள்தோறும் அதிகரித்துச் செல்வதால்; வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளைப் பெரும் அளவில் சார்ந்திருக்கும் நிலை காணப்படுகின்றது. மேலும் இன்றைய உலகில் காணப்படும் சுற்றுச் சூழல்கேடுகள், அணு ஆயுதப்போட்டி, யுத்தங்கள் ஆகிய அனைத்தும்; பண்டைய காலனி ஆதிக்கம் இன்றும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது. வளரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் வளர்ந்த நாடுகளின் அக்கறை இன்மையும் அறியப்படுகிறது. இன்னும் துல்லியமாகக் கூற வேண்டுமானால் வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளைச் சுரண்டும் தன்மையும் நிலவி வருகின்றது.

பொருளாதாரச் சீரழிவுகளும், சுரண்டல்களும் பல்லாண்டுகளாக வளர்ச்சி குன்றிய ஆசிய-ஆப்பிரிக்கா நாடுகளில் பேரளவு காணப்படுகின்றன. இந்த ஆசிய-ஆப்ரிக்கா நாடுகளில் ஏழை மக்கள் குறிப்பாக பெண்களின் பொருளாதாரநிலை மிகவும் கவலைக்கிடமாக, வலுவிழந்து உள்ளது. புதிய பன்னாட்டுப் பொருளாதார அமைப்பு (New International Economic Order) அதாவது வடக்கு-தெற்குப் பொருளாதார அமைப்பு முறை (North - South Economic system) பல நாடுகளின் வளங்களைச் சுரண்டி, சில நாடுகளை வளமிக்க நாடுகளாக மாற்றி விட்டன.

இன்று உலகில் காணப்படும் பல்வேறு சமூகப் பொருளாதார வெளிப்பாடுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய. (Inter related) மட்டுமின்றி இவ்வெளிப்பாடுகள் பெண்கள் சார்ந்ததாகவும் (gender-based) உள்ளன. உலகளாவிய 'பிரச்சினை இயற்கை வள ஆதாரச்சரிவு, சுற்றுச்சூழல் கேடுகள், போர் மற்றும் அணு

ஆயுதப்போட்டி ஆகியவை உலக மக்களைப் பல்வேறு வகையில் பாதிக்கின்றன. இவ்வெளிப்பாடுகள் பெண்களைப் பேரளவில் மற்றும் அதிக அளவிலும் தாக்குகின்றன (disproportionately affect women). இவ்விடத்தில் ஒரு வினா எழலாம். இவ்வெளிப்பாடுகள் ஆண்களைப் பாதிப்பதில்லையா? பெண்களை மட்டும்தான் பாதிக்கின்றனவா? இவை இரு சாராரையும் பாதிப்பது என்பது உண்மைதான். ஆனால் பாதிப்பின் தன்மை ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு அதிகமாகும். அதாவது இன்றைய பொருளாதார அமைப்பு முறை மாற்றங்களால் பெண்கள் நேரடியாகவும் (directly) வன்முறையாகவும் தாக்கப்படுகின்றனர்.

1980களில் நைஜீரியா, ஜிம்பாவே போன்ற ஆப்ரிக்க நாடுகள் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியைச் (economic crisis) சந்தித்தன. எனவே இந்நாடுகளில் உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி மையம் ஆகியவற்றின் பரிந்துரைப்படி அமைப்பு முறை சரிச்சீர் திட்டங்கள் (Structural Adjustment Programmer) செயல்படுத்தப்பட்டன. ஆனால் இந்த அமைப்பு முறை சரிச்சீர் திட்டங்கள் வளரும் நாடுகளில் உள்ள பெண்கள் மற்றும் சிறார்கள் மீது மிகப்பெரிய பாழாக்கும் விளைவுகளை (Devastating impact) ஏற்படுத்திவிட்டன. மறுக்க இயலாத பசி, பட்டினியில் பாதிக்கப்பட்ட நைஜீரியா, ஜிம்பாவேயில் இத்திட்டங்கள் ஏழைப் பெண்களை மிகவும் பாதித்தது. இந்நாடுகளில் 45,000 முதல் 50,000 வரை தொழிலாளர்கள் முறைசார் வேலைவாய்ப்பிலிருந்து தூக்கி எறியப்பட்டனர். நாடு முழுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்றப்பட்டது.

குறைந்த பயிற்சி பெற்ற மற்றும் குறைந்த கூலி வழங்கப்படும் தொழில்களைச் செய்து வந்த பெண் தொழிலாளர்களைப் பேரளவில் பாதித்தது.

மேலும் தொழில் துறையில் பால்சார் வேலை பகுப்பு (gender based division of labour) பெண் தொழிலாளர்கள் சேவைத் துறையில் (Service sector) சுயவேலை வாய்ப்பு (self employed) பெற்றனர். அதிகத் தொழில் நுட்பம் சார்ந்த தொழில் துறையில் பெண்கள் வேலை வாய்ப்புப் பெற இயலவில்லை.

பெண்களுக்கு மூலதனம் பெறுதல், அரசுசார் மற்றும் அரசுசாராத் திட்டங்களிலிருந்து பெரும் அளவில் பயன் அடைதல் கிடைக்கப் பெறாதுபோயிற்று. இதனால் பெண்களின் வளர்ச்சி மற்றும் உயர்வு பாதிக்கப்பட்டன.

இத்திட்டங்கள் மட்டுமின்றி இந்நாடுகளில் பெண்கல்வி வளர்ச்சி அடையாததால் பெண்கள் சமுதாயத்தில் உயர் அந்தஸ்து பெறுவது மற்றும் உயர்பதவி அடைவது இயலாமல் போனது.

அரசு மற்றும் முறைசார் துறைகளில் வேலை குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டதால் பெரிய அளவில் ஆண்கள் வேலை வாய்ப்பை இழந்தனர். எனவே, பெண்கள் குடும்பத்தை வழி நடத்த முறைசாரா தொழில்களிலிருந்து (informal sector) அதிக வருமானம் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பொருளாதார சீரமைப்புத் திட்டங்களான சமூக சேவைகளுக்கான மானியம் ஒழிப்பு விலைக்கட்டுப்பாடு தளர்வு, நாணய மதிப்பிறக்கம் ஆகியவை பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆசிய, ஆப்பிரிக்கா நாடுகளில் உள்ள பெண்களைப் பெரிதும் பாதித்தன.

பொருளாதார முன்னேற்றமான வேலைவாய்ப்பின் அளவு குறைந்தது மட்டுமின்றி, சமூக முன்னேற்றத்தின் அடிப்படையான ஆரோக்கியமான வாழ்வும், வளரும் நாடுகளில் பல பெண்களுக்குக் கிடைக்கப்பெறாத நிலைமைகள் உள்ளன. உடல் அமைப்பு ரீதியாகவும், உயிரியல் ரீதியாகவும் ஆண்களைவிட பெண்களே HIV கொள்ளை நோயினால் பெரும் துயர் அடைகின்றனர். சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து வசதியும் பெண்களுக்குக் குறைவாகவே உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கான பத்தாண்டுத் திட்டம் (Decade of Women) பெண்களுக்குக் குறைவான அளவிலேயே சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து வசதிகள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டியதில் பெரும் பங்கு வகித்தது.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் வசிக்கும் ஏழைப் பெண்கள் பல்வேறு உடல்நலக் குறைவுடன் உள்ளனர்.

மேலும் 1980-களில் மார்பகப் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான நிதி ஆதாரம் பிற நோய் ஆராய்ச்சிக்கான நிதியை (funding for research) விட மிகவும் குறைவாக இருப்பது உணரப்பட்டது.

வறிய நாடுகளில் குழந்தைபிறப்பு வீதம் அதிகம். மேலும் இந்நாடுகளில் பெண்களுக்கான சமுதாய அந்தஸ்து குறைவு. அடிக்கடிப் பிள்ளைப் பேறு மற்றும் வறுமை இவை இரண்டுமே பெண்களின் உடல்நலத்திறன் மற்றும் ஊட்டச்சத்து குறைவாக இருப்பதற்கான முக்கிய காரணங்களாகும்.

இவ்வளரும் நாடுகளில் பிறப்புவீதம் மட்டும் அதிகம் அல்ல. இறப்பு விகிதம், அதாவது (Infant Mortality Rate) குழந்தைகள் இறப்பு விகிதம் இந்நாடுகளில் அதிக அளவு காணப்படுகின்றது. மேலும் ஊட்டச் சத்து குறைவு ஒரு தலைமுறையில் உள்ளது மட்டுமின்றி தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்றது.

உதாரணமாக, உலக நாடுகளில் பேறுகாலத்தின் போது இறக்கக்கூடிய பெண்கள் ஆண்டுக்கு 5 இலட்சம் பேர்கள். இதில் 6 ஆயிரம் பேர் வளர்ந்த நாடுகளிலுள்ள பெண்கள். ஆனால் வளரும் நாடுகளில் இந்த அளவு 4 இலட்சத்து 94 ஆயிரம் பெண்கள். அதாவது ஏறக்குறைய 99 சதவிகித பேறுகால இறப்புகள் வறிய ஆசிய, ஆப்ரிக்க நாடுகளில் காணப்படுகின்றது.

சமாதான காலங்களில் பெண்களின் வெளிப்பாடு கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற சமூக பொருளாதார அம்சங்களாக உள்ளன. ஆனால் போர்க்காலங்களில் பெண்களின் வெளிப்பாடு மிக மிகக் கொடுமையானது ஆகும். அதாவது, போர்க்காலங்களிலும் அதிக அளவு பாதிக்கப்படுபவர்கள் பெண்களே ஆவர். இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் போரின் வன்முறைக்கு பலிகடா பெண்களே ஆவர். நாடுகள் ரீதியாகவும், மதம், இனம் ரீதியாகவும், எதிரிகள் மற்றும் நட்பு நாடுகளின் உதவி இராணுவத்தினராலும் பாதிக்கப்படுபவர் பெண்களே.

போர்க்காலங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறை மானபங்கப்படுத்துதல், கற்பழித்தல் ஆகும். இதுமட்டுமின்றிப் பல்வேறான பால்ரீதியில் பழிதூற்றல் (sexual abuse) சித்திரவதை,

கொலை, மனரீதியான வன்முறை, பயம், கணவன், குழந்தைகளைப் பிரிந்திருத்தல், அகதிகளானால் ஏற்படக்கூடிய சித்திரவதை எனப் பல்வகை கொடுமைகளைப் பெண்கள் அடைகின்றனர்.

போரில் வெற்றி ஏற்பட்டால் பெண்கள் வெற்றிபெற்ற நாட்டின் சொத்தாகக் கருதப்படுவர். பால்ரீதியான ஆளுமை வெற்றிக்கான பரிசாகக் கருதப்படுகிறது. போரின் பொழுது பெண்களிடம் ஆயுதப்பாதுகாப்போ, ஆண் பாதுகாப்போ (Weapons & maleprotection) கிடையாது. பெண்கள் எதிரியின் சொத்தாகக் கருதப்பட்டு அவர்களைக் கற்பழிப்பது வெற்றியின் சாதனையாகக் கருதப்படுகின்றது.

பல்வேறு ஆராய்ச்சியின் தெரிவுகள் பெண்கல்வி, வேலைவாய்ப்பு, குறைந்து செல்லும் பிறப்பு வீதம் ஆகிய மாறிகளுக்கிடையே நேர்மறையான தொடர்பு உண்டு என நிரூபிக்கின்றன.

இன்று பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளில் உலக நாடுகளில் அடைய வேண்டிய முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது நீடித்த / நிலையான வளர்ச்சி (Sustainable development) அதாவது இன்றைய தலைமுறைக்கு மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சியை உறுதி செய்யும் செயல்பாடுகளை மேற்கொள்வது ஆகும். இச்செயல்பாடுகளில் பெரும் பங்கு பெறுபவர்கள் பெண்களே ஆவர்.

கழிவுகளை மறுசுழற்சி செய்வது, மரங்களை நட்டு பராமரிப்பது, குடும்பக் கட்டுப்பாடு மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் செல்வது போன்ற சுற்றுச்சூழல் பணிகள் பலவற்றைச் செயலாற்றி வெற்றி பெறுபவர்கள் (environmental activists) பெண்களே.

லிமா, பெரு போன்ற பொருளாதார முன்னேற்றத்தில் பின்தங்கிய இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒரு லட்சம் பேர்கள் சுயகுழுக்களையும் அரசு சாரா அமைப்புகளையும் 1980-களில் உருவாக்கினர். தென்கொரியா, இந்தோனேசியா போன்ற ஆசிய

நாடுகளில் பெண்களே தாய்க்கழகம் (Mother's club) என்ற அமைப்பினை அமைத்தனர். இந்த அமைப்புகளின் மூலம் பெண்கள் தங்களது சமூகப்பொருளாதார வெளிப்பாடுகளுக்குத் தீர்வுகளைத் தேடினர்.

கொலம்பியாவில் தாய்க்கழக முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் கூச்ச சுபாவம் காரணமாக வெட்கப்பட்டனர். ஆனால் இதே பெண்கள் சில ஆண்டுகளில் குடும்ப வருமானத்திற்கு மட்டுமின்றிச் சமுதாய நடவடிக்கைகள் மற்றும் வட்டார வளர்ச்சி செயல்பாடுகளில் பங்கு கொண்டனர்.

ஆப்ரிக்கா ஆசிய நாடுகளில் வேளாண்மை உற்பத்திக்குக் கிராமப்பெண்களின் பங்கு அளவற்றது. பெண்களின் பங்களிப்பு மிகப் பெரிய அளவில் இருந்தாலும், உணவுக் கொள்கையை (Designing food policy) வடிவமைப்பதில் பெண்களுக்குப் பங்கு இல்லை. பல ஆப்பிரிக்க சமுதாயத்தில் பெண்கள் நில உரிமையாளராகத் தொன்று தொட்டு ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை.

வேளாண் நிலங்களில் உழைப்பது பெண்கள்; உழைப்பின் உற்பத்திப் பெருமையை அடைபவர்கள் ஆண்கள்; பெண்களின் உழைப்பு மற்றும் முயற்சிக்கான வெகுமதியை ஆண்கள் பெறுகின்றனர். ஆப்ரிக்க நாடுகளில் பயிர்க் கொள்கை உணவுப் பயிர் உற்பத்தியிலிருந்து வாணிபப் பயிர் உற்பத்திக்கு ஆதரவாக அமைந்ததால், பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே!

வாணிபப் பயிர் உற்பத்திக்குத் தேவையான மூலதனமோ, கடன் பெறுவதற்கான பிணைப்பொருட்களோ பெண்களிடம் இல்லை. உணவுப்பயிர் உற்பத்தி என்பது இந்நாடுகளில் பெண்களின் தொழில் எனக் கருதப்பட்டது. மேலும் உணவுப்பயிர் உற்பத்தியிலிருந்து வாணிபப்பயிர் உற்பத்திக்கு ஆண்கள் அதிகம் முக்கியத்துவம் அளித்ததால், ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள பல நாடுகளில் உணவு நெருக்கடி (Food Crisis) ஏற்பட்டது. உணவு நெருக்கடி ஏற்பட்டதால் ஆப்ரிக்காவில் பல இலட்ச மக்கள் இறந்தனர்; பட்டினியால் வாடினர்; ஊட்டச்சத்து குறைவால் துன்புற்றனர். இப்பிரச்சனைக்கு அடிப்படைக் காரணம் என்ன? நாட்டின் உணவுக் கொள்கையை உருவாக்குவதில் பெண்களின்

பங்களிப்பு உணரப்படாததே காரணமாகும். இந்தக் குறைபாட்டினால் துன்புறுபவர்கள் பெண்களே; எவ்வாறு எனில், இன்று பல ஆசிய, ஆப்ரிக்க நாடுகளில் மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு Food Security வழங்குபவர்கள் பெண்கள. ஆண்களின் பணப்பயிர் மாற்று அமைப்பினால் உணவுக்காக அக்கறை கொள்பவர்கள் பெண்கள் (food care taken) என்ற பணியைச் செய்ய இயலாமல் இந்நாடுகளில் பெண்கள் துயறுற்றனர்.

கென்யா நாட்டிலிருந்து பெறப்பட்ட 15 ஆண்டுகளுக்கான புள்ளிவிபரங்கள் ஆண்களைக் காட்டிலும், பெண்கள் 18 மடங்கு அதிகம் உழைத்ததை நிரூபிக்கின்றன. கால்நடை பராமரிப்பு, வேளாண் வேலை, வீட்டுவேலை, குழந்தை பராமரிப்பு, உணவு தயாரித்தல், வீட்டுத் தோட்டப் பராமரிப்பு எனப் பெண்களின் வேளைப்பளு ஆப்ரிக்க நாடுகளில் மிகவும் அதிகமாகும்.

இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் பல்வேறு வளரும் நாடுகளில் அடுப்பு எரிப்பதற்கான விறகு, வீட்டிற்கான தண்ணீர் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்காக உணவுப் பண்டச் சேமிப்பு ஆகிய அனைத்தையும் பெண்கள் தங்களது உடல் உழைப்பு மற்றும் நேரம் ஆகியவற்றைப் பெருமளவில் பயன்படுத்த வேண்டியுள்ளது.

பெண்கள் சமுதாயத்தின் உயிர்நாடி, சமுதாயத்தின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படுகின்றனர். பெண்கள் குறிப்பாக வளரும் நாடுகளில் தங்கள் குடும்பத்தினருக்கும், குழந்தைகளுக் காகவும் கவனமாகத் திட்டமிட்டு, முடிவு எடுத்து குடும்பத்தை நிர்வகித்து, எவ்விதத்திலும் குடும்பத்தின் சமூகப் பொருளாதாரத் தரம் தாழ்வுறாமல் கவனமாகப் பாடுபடுகின்றனர். பெண்கள் பல்பொறுப்பு அம்சத்தினர்; பல்துறை பயிற்சித் திறம் பெற்றவர்கள் (versatile). எனவே, பெண்களின் பொது வெளிப்பாடு களுக்கான தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வளரும் நாடுகளில் பெண்களின் சமூகப் பொருளாதார வெளிப்பாடுகளின் அளவும், தன்மையும் பெண்களுக்காகப் போதிய கவனம் செலுத்திய பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை அமைப்பதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இத்திட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

1. வளர்ச்சித் திட்டங்கள் பெண்களின் பண வருமான முயற்சிக்கு உறுதுணையாக அமைய வேண்டும்.

2.பெரிய தொழில்களைப் பெண்கள் மேற்கொள்வதற்கான பயிற்சிகள் வழங்க முயற்சிகள் அமைய வேண்டும். அதே நேரத்தில், சிறிய தொழில் செய்யும் பெண்கள் அதிக இலாபம் பெற "தொழில் விரிவு" செய்ய ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

3.உணவுப் பாதுகாப்பிற்கான தொழில் நுட்பம், தகவல்கள், பரிமாற்றம், பல்வேறு வள ஆதாரங்கள் ஆகியவற்றைப் பெண்கள் பெறுவதற்கான வாய்ப்பு வழிகள் உறுதி செய்யப்படவேண்டும்.

4.வேளாண்மை இல்லாத நாடுகளில் வேளாண் அல்லாத பிற தொழில் வாய்ப்புகள் பெண்கள் பெற வழிவகை செய்ய வேண்டும்.

5.ஒருவீடு; ஒரு சமுதாயம்; ஒரு நாடு - இன்று செயல்படுவதற்குப் பெண்களின் பங்களிப்புப் பெரியது ஆகும் என்ற கருத்தினை உணர்ந்து சமுதாயம் ஆதரிக்கும் சூழலும் தோன்ற வேண்டும்.

6.இறுதியாக ஆனால், உறுதியாக பெண்கல்வியை ஆதரிக்க வேண்டும். கல்வி அறிவும், விழிப்புணர்வும் பெண்களிடம் ஏற்படுமானால் வேளாண்மை முறைகள், நல்வாழ்வு முறைகள், ஊட்டச்சத்து அதிகரிப்பு ஆகியவற்றுள் பல்வேறு நல்ல மாறுதல்கள் தோன்ற வாய்ப்புள்ளது. பெண்கல்வி பெண்கள் பல்வேறு தீர்மானம் நிறைவேற்று அமைப்புகளில் (decision making bodies) பல்வேறு நிலைகளில் தலைமைப்பொறுப்பு ஏற்பதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

வளரும் நாடுகளில் பெண்கள் சமூகப் பொருளாதாரப் பொது வெளிப்பாடுகளுக்கு வளரும் நாடுகள் மட்டுமின்றி, வளர்ந்த நாடுகளும் கவனம் செலுத்துவது அவசியம்; ஏனெனில் இன்றைய உலகில் எல்லா வெளிப்பாடுகளும் ஒரு பிரதேச அளவிலோ, ஒரு நாட்டின் அளவிலோ பாதிப்பதில்லை. உலக அளவில் இவற்றின் தாக்கம் உண்டு. எனவே பெண்களின் வெளிப்பாடுகள் உலக மக்களின் வெளிப்பாடுகள் ஆகும்.

# தமிழும் மலையாளமும்

*எஸ்.வையாபுரிப்பிள்ளை*

(திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறையில் முன்னாள் பேராசிரியர்)

## சொல் வடிவங்கள்

இனி, சில சொல் வடிவங்களை நோக்குவோம், "துணை" என்ற தமிழ்ச்சொல் அளவு, வரை என்று பொருள்படும், "பொன்றுந்துணையும் புகழ்" என்பது திருக்குறள் (159), இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் இந்த இடைச்சொல், "தனை" என வடிவுதிரிந்தது. "இத்தனையும் வேண்டும்" என்றனர் மாணிக்கவாசகர் (திருவெம்பாவை 3) இவ்வாறு திரிந்தவடிவமே ராமசரிதத்தில் (15-2) வருகின்றது. உடலம், இல்லம் என்பவும் இத்தகைய உதாரணங்களே, 'உடலம்' என்பது சரீரம் என்று பொருள்படும். இச்சொல் 'உடல்' என்பதனோடு 'அம்' விகுதி சேர்ந்துவந்தது. 'உடல்' என்பதற்குத்தானும் சரீரம் என்ற பொருள் சங்ககால வழக்கிற்காணப்பெறவில்லை. எனவே 'உடலம்' பிற்பட்ட சொல்லாதல் தெளிவு. 'சலந்தரன் உடலந் தடித்த' என்பது தேவாரம். இப்பிற்பட்ட வழக்குச்சொல்லே மலையாளத்தில் ராமசரிதத்தில் உள்ளது. இல்லம் என்ற சொல் இப்போது மலையாளத்தில் பரக்க வழங்குகிறது. ஆனால் தமிழில் இது பிற்கால வழக்கு, சங்க காலத்தில் 'இல்' எனவே உள்ளது. 'இல்லடு கள்ளின்' என்பது புறநானூறு (329). இல்லம் என்ற சொல்லை அப்பர் வழங்குகிறார். 'இல்லமே தாம் புகுதா இடுமின் பிச்சை என்றார்க்கு' (6,9,9) என்பது அவர் திருவாக்கு, 'இல்லம் சிறியாரைக் கொண்டு புகலும்' எனத் திரிகடுகத்திலும் (4), 'இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி' எனத் திருவாசகத்திலும் (திருவெம்பாவை 17) வந்துள்ளமை காணலாம். இவற்றால் 'இல்லம்' என்பது சுமார் 7ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ்வழக்கிற்புகுந்ததெனல் தெளிவாம். இப்பிற்பட்ட சொல்வழக்கே மலையாளத்திற் காணப்படுகிறது. இங்ஙனமாக, இடைக்காலத்து இறுதியில் தோன்றிய தமிழ்ச்சொல்வடிவங்கள் பிராசீனமலையாள இலக்கியத்தில் காணப்படுகின்றன.

## ஒலி மாற்றம்

மொழிகளில் அதிபுராதனமாகிய சொற்கள் ஸர்வநாமங்கள் என்று சொல்லப்படுகிற மூவிடப்பெயர்களும், ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களும் ஆம். மூவிடப்பெயர்களில் "யான்" என்பது தன்மையொருமைக்குரிய பண்டைத்தமிழ், நான் என்பது இடைக்காலத்தே தோன்றி நாளடைவில் வழக்கில்மிகுந்து இன்றைக்குச் சொல்லாகிவிட்டது. இப்படித்திரிந்த தன்மைப்பெயரே மலையாளத்தில் ராமசரிதத்தில் "ஞான்" என வருகிறது. நான் என்பது ஒலிமாற்றத்தால் திரிந்து ஞான் என வருதல் இங்கு அறியத்தக்கது. நாறு-ஞாறு, நாலுதல்-ஞாலுதல் முதலிய சொற்களை நோக்குக. எண்ணுக்குரிய பெயர்களில் ஒன்று என்பது ஒந்நு என மலையாளத்தில் வரும். இது இடைக்காலத்திறுதியில் பேச்சுவழக்குத் தமிழிலிருந்து தோன்றிய வடிவமாகும். இதுபோன்ற பல சொற்கள் உள்ளன. "மூந்நு" "கந்நுகாலி" முதலியவற்றைக் காண்க. இவையாவும் தமிழ்ச்சொற்கள் ஒலிமாறி விளைந்த மலையாளச் சொற்களே.

## சொல் அமைதி : இடைநிலை

மேற்குறித்தவை சொற்கள்பற்றியன. சொற்களின் அமைதியை இனி நோக்குவோம். இவ்வமைதியால் மொழிகளின் சம்பந்தமும் கால முற்-பிற்பாடும் நன்கு தெளிவாகும். எனவே இந்த அமைதியை மொழிநூல் அறிஞர் மிகவும் போற்றுவர். ஒரு வினைச்சொல்லை எடுத்துக்கொள்வோம். "அறிவிக்கின்றேன்" என்ற சொல்லில் "அறி" என்ற வினையடியோடு "வி" என்ற பிற வினைவிகுதியும், கின்று என்ற நிகழ்கால இடைநிலையும், "ஏன்" என்னும் இடைநிலை தொல்காப்பியத்திற் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களிலும் காணப்படவில்லை. இடைக் காலத்திறுதியிலுள்ள இலக்கியங்களிலும் 13 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலிலும் தரப்பட்டுள்ளது. மலையாளத்தில் இவ்வினைச் சொல் "அறியிக்கிந்நேன்" என வந்துள்ளது. ஒன்று - ஒந்நு என வருதல்போல "கின்றேன் என்பது கிந்நேன்" என வந்தமையும் வெளிப்படை. இதனால் இடைக்காலத்து இறுதியிலுள்ள தமிழ் வினை முற்றின் அமைதியே பிராசீன் மலையாளத்தில் காணப்படுகிறது.

## வேற்றுமை விகுதிகள்

இனி, பெயர்ச் சொற்கள் உருபு பெற்றுவரும் சொல்லமைதியை நோக்குவோம். தொல்காப்பியத்தில் "அது" என்பது 6ஆம் வேற்றுமை யுருபாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவன்றி "உடை" அல்லது உடைய என்னுஞ்சொற்கள் 6 ஆம் வேற்றுமையின் உருபாகவோ சொல்லுருபாகவோ வழங்கியதில்லை. இடைக்காலத்து இறுதியில் இவ்வுருபுகள் தோன்றத் தொடங்கின. 'செருப்புடையடியர்' (அகம்.129) என்பனபோன்ற பிரயோகங்கள் சங்காலத்து உளவே யெனின், ஈண்டெல்லாம் இரண்டாம் வேற்றுமையுருபு விரிந்து அதற்குரிய உடைமைப்பொருளில் வந்து உடைச்சொல்லாகும். மேற்காட்டியதற்குச் 'செருப்பினையுடைய அடியினர்' என்பது பொருளாம். இதன்கணுள்ள 'உடை' ஆறாம்வேற்றுமையுருபு அன்று 'தம்முடைய தண்ணளியும்' எனப் பிற்பட்ட சிலப்பதிகாரத்தில் (கானல் வரி 32) வருகின்றது. கம்பர் "நம்முடைச் சிலைகள் போல் நலியலாமோ" என்றனர் (யுத்த, மந்திர, 80). ஈரிடத்தும் 'உடைய' 'உடை' என்பன 6ஆம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளமை தெளிவு. மலையாளமொழியை நோக்கும்போது, அதில் 6ஆம் வேற்றுமையுருபாக "உடெ" என்பது பிராசீன இலக்கியங்களில் காணப்படுகின்றது. ராமசரிதத்தில்வரும் "மைதிலிதன்னுடெ" என்பது இதற்கு உதாரணம். இது வேண்டுமிடங்களில் இன்சாரியைபெற்று "ன்றெ" என மருவியும் வழங்கலாயிற்று, தமிழிலும் இவ்வுருபு இன்சாரியைபெற்று வருதல் மிகப்பிற்பட்ட வழக்கு. 'குதிரையினுடைய' என்பது உதாரணம். சாரியையின் அம்சமாகிய னகர வொற்றும் 'உடை' என்றதன் அம்சமாகிய 'டெ'யும் சேர 'ன்றெ' என மலையாளத்தில் எழுதப்படுகிறது. இதனால் இடைக்காலத்து இறுதியில் தமிழில் வழங்கிய 6ஆம் வேற்றுமை யுருபே பிராசீனமலையாளத்தில் திரிந்துவந்தமை தெளிவாகும்.

## சொற்பொருள்

இனி, சொற்பொருளை நோக்குவோம். "எவன்" என்ற சொல் பண்டைத்தமிழில் "ஏன்", "என்ன" 'யாது' என்ற பொருள்களிலே

தான் வரும். 'சொல்வது எவன்' என்பது சொல்வது ஏன் என்று பொருள்படும். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இப்பொருள்களே காணப்படுவன. இடைக்காலத்து இறுதியில் இப்பொருள்களோடு யாவன், யார் என்ற உயர்திணைப் பொருளும் காணப்படுகிறது. "உயர்வற வுயர்நலம் அருளினன் எவன் அவன்" என்பது திருவாய்மொழி. மலையாளமொழியில் அதன் பண்டைநிலை முதற்கொண்டு யார் என்ற பொருளில் மட்டுமே இச்சொல் வழங்கிவருவதாகும். 'எவன் ஒருத்தன்' என வியவகார மாலையில் வருகிறது. எனவே இடைக்காலத்திறுதியில் தமிழில் தோன்றிய பொருளிலேதான் மலையாளமொழியில் இச்சொல் வழங்குகிறது.

### மொழிநடை

இனி மொழிநடையை எடுத்துக்கொள்வோம். பண்டைக் காலத்துத் தமிழ்நடை உருபு முதலியனஇன்றி மிகச்செறிவுற்றுச் செல்கிறது. இடைக்காலத்து நடை உருபுகள் முதலியன அங்கங்கே விரிந்து சிறிதளவு நெகிழ்ந்துசெல்வதாகும். இதன் இறுதிக் காலத்தில் நெகிழ்ச்சி இன்னும் அதிகப்பட்டு வாக்கியங்களும் பூரணமாய் அமைந்து, பேச்சுவழக்கைப் பெரும்பாலும் ஒட்டிச் செல்கிறது. உதாரணமாக,

வாசவன் மலரின் மேலான் மழுவலான் மைந்தன் மற்றக்
கேசவன் சிறுவ ரென்ற தன்மையோர் தம்மைக் கேளாய்
பூசலின் எதிர்ந்தே னென்றாய் போர்க்களம் புக்க போதென்
ஆசையின் கனியைக் கண்ணிற் கண்டிலை போலும் அஞ்சி,

என்னும் கம்பன் செய்யுளைக் கூறலாம்.

இதனோடு

*அரசர்கள் கோனே மேன்மேல் அருந்துயர் விடுத்தீ வண்ணம்
புரிகுழ லாளெ நண்ணிப் போக்கு மதல்ல காலம்;
இருபது கரங்கள் தங்கும் இலங்க வேந்தனெ யொரிக்கால்

*ஈவண்ணம்-இவ்வண்ணம். புரிகுழலாளெ-புரிகுழலாளை. இலங்க-இலங்கை. வேந்தனெ-வேந்தனை. ஒரிக்கால்-ஒருக்கால். களக-களைக. இப்போழ்-இப்பொழுது. எனிக்கு-எனக்கு. ஞான்-நான். என்னெ-என்னை.

கருதுக, களக சோகம், கைக்கொள்க கோப மிப்போழ்.

என ராமசரிதத்திலே வரும் பாட்டை ஒப்பிடலாம். இங்ஙனமே,

எனக்கு நீ செய்யத் தக்க கடனெலாம் ஏங்கியேங்கி
உனக்குநான் செய்வ தானேன் என்னின்யா ருலகத் துள்ளார்.

என்ற கம்பன் செய்யுளையும் (இராவணன் சோகப், 39)

எனிக்குநீ சடங்கி னாலே இயற்றுமொண் கரும மெல்லாம்
நினைக்கு ஞான் செய்யுமாறு நிறுத்திவைத் துயிரோ டென்னெ

என்ற ராமசரித விருத்தத்தையும் (73, 10) ஒப்புநோக்கலாம்.

மொழிநடை ஈரிடத்தும் பெரிதும் ஒத்திருக்கின்றது. எனவே இடைக்காலத்தின் இறுதியிலுள்ள எளிய தமிழ்நடையைச் சார்ந்து தோன்றியதே பிராசீன மலையாளப்பாட்டுக்களின் நடையென்பது விளங்கும்.

### செய்யுள் அமைதி

செய்யுளின் இலக்கண அமைதியை இனி நோக்குவோம், "லீலா திலக"த்தில் தமிழ் எழுத்துக்களால் அமைந்து எதுகை மோனையுடையதாய்வரும் விருத்தவகையே "பாட்டு" எனப் பாட்டினது இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. மலையாளத் திலுள்ள அதிபிராசீன நூலாகிய ராமசரிதம் "பாட்டு" என்ற முறையில் அமைந்ததாம். தமிழில் இவ்விலக்கணத்திற் கேற்ப வரும் விருத்தப் பாக்கள் இடைக்காலத்தில் தோன்றத் தொடங்கி அதன்பிற்பகுதியிலும் பிற்காலத்திலும் மிகவும் பிரசாரம் எய்தியுள்ளன. எனவே ராமசரிதப் பாட்டுக்கள் பிற்காலத்தமிழ் இலக்கியத்தையொட்டியமைந்தன என்று தடையின்றிக் கூறலாம்.

மேற்காட்டிய ராமசரிதப்பாட்டில், ஈவண்ணம், புரிகுழலாளெ, ஒரிக்கால், களக, இப்போழ் முதலிய மலையாளச் சொற்கள் தமிழினது திரிந்த வடிவங்களே. மற்றச்சொற்கள் தமிழ்வடிவத்திலேயே உள்ளன. ஆகவே ராமசரிதகாலமாகிய 14ம் நூற்றாண்டளவில்தான் தமிழிலிருந்து வேறுபட்டு மலையாளம் ஒரு தனிமொழியாகப் பரிணமித்திருக்க வேண்டுமென்று கருதலாம்.

இங்ஙனம் வேறுபடத்தொடங்கிய காலத்தைச் சாசனங்களால் ஒருவாறு வரையறுத்தல்கூடும். மலையாளநாட்டில் இப்போதுள்ள சாசனங்களில் ஐயமின்றி மிகப் பழமையானது கொச்சிராச்சியத்தில் தளியல் என்ற இடத்திற்காணும் சிவன்கோயிற் சாசனமாகும். இது கி.பி.930 ஆம் ஆண்டளவில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. வேறொரு பழையசாசனம் கவியூரில் உள்ளது. அதில் ஒரு பகுதி வருமாறு:

கலியுகந்தொடங்ஙி நாலாயிரத்து அம்பத்தோராமாண்டு திருக்
கவியூர்ப் பட்டாரர்க்கு மகிழஞ்சேரித் தேவன் சேந்நன்
திருவிளக்கும் திருவமுதும் திருவக்கமும் திருச் சந்நணமும்
திருப்புகையும் அமைச்சான்.

இதன் காலம் கி.பி.950. இதில் பேச்சுவழக்குத் தமிழும் சேந்நன் முதலிய தமிழொலி மாறிய மலையாளவடிவங்களும் காணப்படுகின்றன.

இச்சாசனங்களால் கி.பி.10 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழ்திரிந்து மலையாளமொழியாய் அமையத் தொடங்கிற்று என ஐயமின்றித் துணியலாம். இக்காலத்திற்குமுன்பு ஒலிமாற்ற முதலியன நேர்ந்தமைக்கு யாதொரு சான்றுமில்லை. நேர்மாறாக, இதற்குமுன்புள்ள சேரநாட்டுக் கவிஞர்கள் அனைவரும் நல்ல தமிழிலேயே பாடியிருக்கின்றனர். குலசேகராழ்வார், சேரமான் பெருமாள் நாயனார், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் முதலியோரை உதாரணமாகக் காட்டலாம். சங்ககாலத்திற்குச் செல்வோமானால் "பதிற்றுப்பத்து" என்ற தொகை நூலைக் காண்கின்றோம். இது சேர அரசர்களைப்பற்றியது. சங்கச்செய்யுட்களில் வந்துள்ள ஒருசில சொற்கள் இன்றும் மலையாளநாட்டில் வழங்கிவருகின்றன.

தமிழ்மொழிக்குரிய வட்டெழுத்துக்களே மலையாளநாட்டில் பூர்வகாலத்தில் கையாளப்பட்டுவந்தன. அங்குள்ள புராதன சாசனங்கள் தமிழ்மொழியிலேயே அமைந்துள்ளன. இவை தமிழ் மொழியே பண்டைக்காலத்தில் இந்நாட்டில் வழக்கிலிருந்ததென்

பதைப் புலப்படுத்தும். பிராசீன மலையாளக்கவிஞர்கள் தமது மொழியைத் தமிழ் என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ராமப் பணிக்கர் தமது பிரம்மாண்ட புராண மொழிபெயர்ப்பைக் குறித்து 'இதரஞான் தமிழாய்க்கொண்டறியிக்கிந்நேன்' என்று கூறியுள்ளார்.

### மலையாளத்திற்குத் தமிழே தாய்

ஆகவே சொற்கள், சொல்வடிவம், ஒலிமாற்றம், சொற்களின் அமைப்பு, சொற்பொருள், மொழியின்நடை, செய்யுள் - அமைதி, சாசன இலக்கியம், மலையாளநாட்டினர் இயற்றிய பூர்வ - இலக்கியங்கள், எழுத்துவரலாறு, மலையாளக் கவிஞர்களின் கருத்து முதலிய பலநெறிகளால் நோக்கினாலும் இடைக்காலத்திறுதியிலுள்ள தமிழிலிருந்து கி.பி.10 ஆம் நூற்றாண்டளவிலே பிராசீன மலையாள மொழி தோன்றத்தொடங்கியதென்று ஐயமின்றிக்கூறலாம். இதனால் தமிழும் மலையாளமும் தாயும் மகளும் என்ற தொடர்புடையன என்பது தெளிவாக விளங்கும். மலையாளம் தமிழைப்போல் மூலத்திராவிடமொழியிலிருந்து நேரடியாய்ப் பிறந்ததென்றும், இரண்டும் சகோதரித் தொடர்புடையனவென்றும், மலையாளம் தோன்றி 2000 ஆண்டுகளுக்குமேல் ஆய்விட்டன என்றும் சிலர் கூறுவதெல்லாம் அபிமானம் பற்றிய கூற்றென்று தள்ள வேண்டுமேயன்றி நேர்மையான ஆராய்ச்சியின் முடிவெனக் கொள்ளுதற்கில்லை.

மேற்கூறியவாறு தோன்றிய மலையாள மொழியின் தொடக்க நிலையில் உருத்திரியாத தமிழ்ச்சொற்கள் பலவும் உருத்திரிந்தன சிலவும் வழங்கிவந்தன. இவ்வுருத்திரிபும் பெரும்பாலும் நாட்டின் இயற்கையமைதிக்கேற்ப மெல்லோசை தருதற்பொருட்டே நிகழ்ந்தது. பின்னர் மலையாளமொழி, தெலுங்கு, கன்னடம் முதலியவற்றைப்போல், வடமொழியோடு நெருங்கிய உறவுகொள்ளத் தொடங்கிற்று. வடமொழிச்சொற்கள் மிகுதியாக மலையாளத்தில் புகுந்தன. மிருது, கோஷம் முதலிய வடமொழியொலிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தொடர்பினால் மலையாளம் தனது பூர்வநிலையிலிருந்து பெரிதும் வேறுபாடு

அடைந்தது. ஆயினும் அதற்குத் தமிழ்மொழியின் தொடர்பை முற்றிலும் அறுத்துக்கொள்ளமுடியவில்லை. இன்றும் மலையாளமொழி தமிழர்க்கும், தமிழ்மொழி மலையாளிகட்கும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடியனவாகவே உள்ளன. தெலுங்கு, கன்னடமொழிகளுக்கு இல்லாத இவ்வியல்பு இவ்விருமொழிகளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை நன்கு விளக்குகின்றது.

முந்திய எனது வானொலிப்பேச்சிலே இடைக்காலத்தின் இறுதியில் சுமார் 10 ஆம் நூற்றாண்டில், அக்காலத்தில் கேரளத்தில் வழங்கிய தமிழ்மொழி திரிந்து மலையாளமாகப் பரிணமிக்கத் தொடங்கியதென்று கூறினேன். இதுபற்றி முன் காட்டிய பலகாரணங்கள் தவிர, வேறுசில காரணங்களைக் குறித்து இன்று பேசலாமென்று நினைக்கிறேன்.

சொல் வரலாறு

பண்டை மலையாளச்சொற்கள் சிலவற்றிற்கு மலையாள வியாகரண முறையில் சொல்-வரலாறு காணுதல் இயலாது. அவற்றின் பூர்வரூபங்களாகிய தமிழ்ச்சொற்களை நோக்கினால்தான் அவ்வரலாற்றை உணரலாம். உதாரணமாக, வாதல் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதற்கு மலையாளத்தில் வரலாறு யாதும் இல்லை. இதற்குரிய தமிழ்வடிவம் 'வாசம்' என்பது. சம்மதம் தம்மதம், சங்கடம் தங்கடம் என வருதல்போல, வாசல் என்பது வாதல் எனத்திரிந்தது. வாசல் என்ற தமிழ்ச்சொற்கும் இவ்வடிவில் வரலாறு கூறமுடியாது. 11ஆம் நூற்றாண்டளவில் தோன்றி செய்யுட்களில்தான் இச்சொல் காணப்படுகிறது. வானே ரபயன் இரவி குலோத்துங்கன் வாசல் வந்தால் (பெருந்தொகை, 1489) என்பது காண்க. இதனால் இவ்வடிவம் இடைக் காலத்து இறுதியில் சாமானிய வழக்கில் புகுந்த தமிழ் என்பது தெளிவு. இதன் பூர்வரூபம் 'வாயில்' என்பது. 'அடையா வாயில்' எனச் சிறுபாணாற்றுப்படையில் வருகிறது. இதற்குரிய பொருள் 'முகப்பிடம்' அல்லது 'வீட்டின்முகப்பு' என எளிதில் விளங்கும். இதுவே இச்சொல்லின் பிறப்பு வரலாறு. சிலவு, செறுக்கன் முதலியனவும் வேறு உதாரணங்களாகும். செலவு, சிறுக்கன்

என்பனவே இங்ஙனம் திரிந்தன. 'தாங்குகோடிதனஞ் செலவென்பவே' என்ற சிவரகசியமும், 'ஆலினிலைவளர்ந்த சிறுக்கன்' என்ற பெரியாழ்வார் 1,4,7 திருமொழியும் அறியத்தக்கன. இவ்வுதாரணங்களால் மலையாளச்சொற்கள் பலவற்றின் பூர்வவடிவம் தமிழில் உள்ளதென்பதும், அவ்வடிவம் திரிந்துதிரிந்து மலையாள வடிவங்கொண்டதென்பதும், இங்ஙனம் வடிவம் மாறியது சுமார் 10ஆம் நூற்றாண்டிலே என்பதும் நன்கு புலப்படுகின்றன.

இந்நெறிக்குமாறாக தமிழ்ச்சொல் மலையாளமொழியினின்று திரிந்துவந்ததாகவேனும் அதன் பிறப்பு வரலாறு மலையாளத்தில் உள்ளதாகவேனும் காண இயலவில்லை. இதனால் மலையாளமொழி தமிழ்மொழிக்கு மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றியதென்பது வெளிப்படை.

## மரபுத்தொடர்கள்

தமிழிலே இடைக்காலத்து இறுதியில் தோன்றிய சில மரபுத் தொடர்கள் பண்டை மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, திருவுள்ளம் எனக் கம்பன் வழங்குகிறான் (கங்கை, 67), இது ராமசரிதத்திலும் (2,3) வருகிறது. திருமேனி (திருவாய்மொழி 9,7,3) திருவடி (நான்முகன் திருவந்தாதி, 68) முதலியனவும் பிற உதாரணங்கள். இதனால் தமிழ் தோன்றி வளர்ந்து இடைக்காலநிலைமை அடைந்ததன் பிற்பாடு, அதினின்றும் பிராசீனமலையாளத்திலுள்ள மரபுத்தொடர்கள் கொள்ளப்பட்டமை நன்றாக வெளிப்படுகின்றது.

## சந்தியமைப்புக்கள்

தமிழில் பிற்காலத்தில் தோன்றிய சில சந்தியமைப்புக்கள் பண்டை மலையாளத்தில் உள்ளன. உதாரணமாக 'வெவ்வேறு' என்றதனைக் கூறலாம். வேறுவேறு என்ற இரண்டு சொற்கள் ஒன்றுபட்டுச் சந்தி மருவிவந்தது. முற்காலத்துத் தமிழில் இவ்வழக்குக் காணப்படவில்லை. 'பிறப்பினாக்கம் வேறுவேறியல' என்றனர் தொல்காப்பியர் (பிறப்.1). ஆனால் 'வித்தகமும் விதிவசமும் வெவ்வேறே புறங்கிடப்ப' எனக் கம்பன்

பாடுகின்றான். எனவே இடைக்காலத்தின் இறுதியில் புகுந்த இப்பிரயோகமே மலையாள மொழியில் இடம்பெறலாயிற்று. இக்காரணமும் முன்புகூறிய முடிவை வலியுறுத்துகிறது.

இவ்வாறாக, எந்த நெறியில் நோக்கினும் தமிழின் உட்கிளையே மலையாளம் என்பது தெளிவாகிறது. உட்கிளையாகப் பிரிந்த காலமும் 10 ஆம் நூற்றாண்டின் அளவிலாகும்.

## சரித்திரச் சான்றுகள்

இனி, சரித்திர நெறியால் நோக்குவோம். பூர்வகாலத்தில் வடக்கே வேங்கடமலையும், தெற்கே குமரிமுனையும், மற்ற இரண்டு புறத்தும் கடலும் எல்லையாகவுடைய நிலப்பரப்பிலே வாழ்ந்தவர்கள் தமிழ்மக்களே. அவர்கள் பேசிவந்த மொழி தமிழே. இவை தக்க சான்றுகளால் அறியப்படுகின்றன. தொல்காப்பியப் பாயிரத்தில்,

வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து

என வருகிறது. இதனையே சிறிது விளக்கி

வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று
அந்நான் கெல்லை யகவயிற்கிடந்த

என வேறோராசிரியரும் கூறுகிறார். ஆகவே தமிழ் ஒன்றே பண்டைக்காலத்தில் வேங்கடமலைக்குத் தெற்கேயுள்ள தென்னாட்டில் வழங்கிவந்ததாம். இப்பகுதியில் அரசாட்சி புரிந்தவர்கள் சேர சோழ பாண்டியர் என்ற மூன்று பேரரசர்களுமாவர். இவர்களை

தண்டமிழ்க் கிழவர்
முரசுகெழுதானை மூவர்

எனப் புறநானூறும் (35)

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்

எனத் தொல்காப்பியமும் (செய்யுளியல் 79) கூறுகின்றன. சேரருட்பட இம் மூவரும் தமிழர்கள் என்பதில் ஒருவர்க்கும் சந்தேகமேயில்லை. 'தண்தமிழ்க்கிழவர்' என்று இவர்களைப் புறநானூறு குறித்துள்ளது இதனைத் தெளிவாக்குகிறது. அன்றியும், புறநானூற்றில் வரும் பல செய்யுட்கள் சேரரைத் தமிழரசராகவே கொண்டு பாடியுள்ளன. பதிற்றுப்பத்து என்ற தமிழ் நூல் முழுவதும் உதியன்சேரல் முதலிய சேர அரசர்களைப் பற்றியதே. ஐங்குறுநூறு என்ற தொகை நூலை ஒரு சேர அரசர் தொகுப்பித்தனர். தொல்காப்பியரோடு உடன் கற்ற ஆசிரியர் ஒருவர் விளவங்கோட்டுத் தாலுக்கிலுள்ள அதங்கோடு என்னும் ஊரினர். இதனால் இவருக்கு 'அதங்கோட்டாசான்' என்று பெயர் வழங்கியது. தொல்காப்பியரும் சேரநாட்டினர் என்று கருதுவதற்கு இடமுண்டு. சேரநாட்டு அரசர்கள் பலர் தமிழ்க் கவிஞர்களாயும் உள்ளனர். உதாரணமாக குலசேகராழ்வார், சேரமான் பெருமாள், இளங்கோவடிகள் முதலியோரைக் கூறலாம். சிலப்பதிகாரத்தின் கதாநாயகனாகிய சேரன் செங்குட்டுவன். 'அருந்தமிழாற்றல் அறிந்திலர் ஆங்கென' (26-161, 185; 27-5) என்று ஆரியமன்னரைக் குறித்துச் சொல்லித் தமிழரசர்களது தமிழ்ப்பிரதிநிதியாக வடக்கேசென்று போர்புரிந்து வென்றான். இங்ஙனம் கதை அமைத்துள்ளார் சிலப்பதிகாரம் செய்த சேர குலத்து இளங்கோவடிள்.

## பெயர்கள்

சேரநாட்டிலுள்ள பண்டை நகரங்கள் பலவும் தமிழ் பெயர்களையே தாங்கின. உதாரணமாக, கருவூர், தொண்டி, மாந்தை, வெளியம், கழுமலம், தகடூர் முதலியவற்றைக் காணலாம். இங்ஙனமே நதிகளும், மலைகளும்; உதாரணங்கள் பொருநை, பெரியாறு, கொல்லிமலை முதலியன. மக்கட்குரிய இயற்பெயர் முதலியனவும் இத்தன்மையனவே.

ஆய் என்ற பெரும்புகழ்படைத்த அரசனொருவன் சேரநாட்டில் ஆட்சிபுரிந்து பெரிய வள்ளலாய் விளங்கினன். இவன் ஆண்ட சேரநாட்டை ஆய்நாடு என முற்காலத்தில்

கிரேக்கர்கள் வழங்கினர்.

இங்கே காட்டிய சான்றுகளுக்கு எதிராக வேற்றுமொழி இச்சேரநாட்டில் முற்காலத்தே வழங்கியதாக ஒரு சான்றுமில்லை. இது நன்றாக மனங்கொள்ளுதற்குரியது.

கொடுந்தமிழ்

வேங்கட முதற் குமரிவரையுள்ள பெரிய நிலப்பரப்பில் வழங்கிய தமிழ் எங்கும் ஒரே தன்மையதாய் இருந்ததெனல் பொருத்தமாகாது. அங்கங்கே சிற்சில வேறுபாடுகள் இருத்தல் முற்றிலும் இயல்பே. இவ்வேறுபாடுகளைக் குறித்தனவே கொடுந்தமிழ்நாடுகள் என்பன. கொடுந்தமிழ் நாடுகளைப் பன்னிரண்டு என முற்காலத்தார் கணக்கிட்டனர்.

'செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத்தினும்' என்றார் தொல்காப்பியர். இவை இன்னவென்பதை

தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு - நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

என்ற பழஞ்செய்யுள் விளக்குகிறது. இவற்றுள் குட்டநாடு, குடநாடு, வேணாடு, பூமிநாடு என்பன சேரநாட்டுப் பகுதிகளென ஐயமின்றிக் கூறலாம். தாயைத் தள்ளையென்றும், தந்தையை அச்சன் என்றும் குட்டநாட்டினரும் குடநாட்டினரும் கூறுவரெனச் சொல்லப்படுகிறது. (நன்னூல் 272 மயிலை), இவ்வழக்காறு இன்றும் சேரநாட்டில் உள்ளதென்பது நாம் நன்கு அறிந்ததே. இச்சிறு வேறுபாடுகள் இருந்தபோதிலும், இவையனைத்தும் தமிழ் நாட்டுப் பகுதிகளேயென்பதில் ஐயமில்லை. இங்கே வழங்கிய மொழியும் தமிழேயாகும்.

தொடரும்

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. © 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. © 2341116